
1) *செய்முறைப் புவியியல்*





2) *பௌதிகப் புவியியல்*



ஆசிரியர்:
K.V.நரேஸ்குமார்
BA Hons
Geography Special

3) *மானிடப் புவியியல்*



எல்லா வினாக்களுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

01) **"புவியிலாளர்களின் ஆயுதம்"** எனப்படுவது,

1. சலாகைகள் 2. தேசப் படங்கள் 3. சித்திரப் படங்கள்
4. புள்ளிப் படங்கள் 5. சமுத்திரப் படங்கள்

(……)

02) மிகப் பழைய தேசப்படங்கள் கண்டறியப்பட்ட பிரதேசம்,

1. சீனா 2. இந்தியா 3. எகிப்து
4. ஈரான் 5. மெக்சிக்கோ

(……)

03) தேசப்படங்களின் இரு பிரதான பிரிவுகளாவன,

1. இருபரிமானப் படங்கள், முப்பரிமானப் படங்கள் 2. கருப்பொருட் படங்கள், இடவிளக்கப் படங்கள்
3. செய்மதிப் படங்கள், விமான ஒளிப்படங்கள் 4. சலாகை வரைபடங்கள், தொலையுணர்வுப் படங்கள்
5. தரையமைப்புப் படங்கள், நிலப்பயன்பாட்டுப் படங்கள்

(……)

04) கருப்பொருட் படங்களின் பிரதான இயல்பாக அமைவது,

1. மானிட நிலத்தோற்றங்களைக் மட்டும் கொண்டது 2. ஒரு புவியியல் நிலத்தோற்றத்தை மட்டும் கொண்டது.
3. பௌதிக நிலத்தோற்றங்களை மட்டும் கொண்டது 4. பௌதிக, மானிட நிலத்தோற்றங்களைக் கொண்டது
5. பௌதிக, மானிட விடயங்களைக் கொண்டது

(……)

05) ஓரங்குல அளவுத்திட்டமாக அமைவது,

1. 1:10,000 2. 1:75,000 3. 1:63,360 4. 1:50,000 5. 1:100,000

(……)

06) சமவுயரக் கோடுகள் ஒரே புள்ளியில் வெட்டிச் செல்கின்ற பௌதிக நிலவுறுப்பு,

1. கூம்புக்குன்று 2. நீள்குன்று 3. ஒத்தகரை 4. ஒவ்வாதகரை 5. ஓங்கல்

(……)

07) கீழ் வருவனவற்றில் ஆற்றுவடிகால் அம்சம் அல்லாதது,

1. மரநிகர் வடிகால் 2. செங்குத்து வடிகால் 3. நீர்ப்பிரிநிலம்
4. ஆரை வடிகால் 5. கங்கண வடிகால்

(……)

08) A – ஓர் ஆற்றின் கிளையாறு பிறிதொரு ஆற்றுடன் இணைந்து பாய்தல்
B – சமவுயரக் கோடுகள் ஒரே புள்ளியில் வெட்டிச் செல்லுதல்
C – பாறைகளால் சூழப்பட்ட மலைச்சாய்வு
D - ஆற்றுக்கு மத்தியில் மணல் படிவுகள் அதிகளவு உருவாகுதல்

மேற்படி கூற்றுக்குரிய பௌதிக நிலவுருவங்களை முறையே தரும் விடைத்தொகுதி எது?

1) கங்கண வடிகாலமைப்பு, சரிவுப்பாறை, வெளிக்கிடை, ஆற்றிடைத்தீவு
2) ஆற்றுச்சங்கமம், ஓங்கல், வெளியரும்புப் பாறை, ஆற்றிடைத்தீவு
3) ஆரை வடிகாலமைப்பு, ஓங்கல், வெளியரும்புப் பாறை, ஆற்றிடைத்தீவு
4) ஆற்றுச்சிறை, கூம்புக்குன்று, உட்கிடை, பின்னிய ஆறு
5) ஆற்றுச்சிறை, ஓங்கல், வெளிக்கிடை, பின்வாங்குமருவி

(……)

09) தேசப்படம் ஒன்றின் பிரதான அம்சங்களைத் தரும் விடை?

1) திசை, பௌதிகவம்சம், பிரதேசப்பெயர், இடவுயரம்
2) அளவுத்திட்டம், திசை, குறியீடுகள், பிரதேச விபரணப்பட்டியல்
3) பௌதிகவம்சம், பண்பாட்டம்சம், காலநிலை, திசை
4) அளவுத்திட்டம், பௌதிகவம்சம், பண்பாட்டம்சம், அளியடைப்பு
5) அளவுத்திட்டம், பௌதிகவம்சம், பண்பாட்டம்சம், குறியீடுகள்

(……)

10) இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படங்களில் தேசிய ஆள்கூற்றுப் பெறுமானங்கள் ஆரம்பிக்கும் புள்ளி எது?

1) பருத்தித்துறைக்கு மேற்காக 200km மற்றும் தெற்காக 200km புள்ளியில்
2) பெரிய பாஸிலிருந்து மேற்காக 200km மற்றும் தெற்காக 200km புள்ளியில்
3) பேதுறுதாலகாலவுக்கு கிழக்காக 200km மற்றும் வடக்காக 200km புள்ளியில்
4) கதிர்காமத்திற்கு கிழக்காக 200km மற்றும் வடக்காக 200km புள்ளியில்
5) பேதுறுதாலகாலவுக்கு மேற்காக 200km மற்றும் தெற்காகாக 200km புள்ளியில் (……)

V.Naresh BA Hons Geo.Spl


11) வருடத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சேர்க்கையைக் காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான படவரைகலை?
1) கோட்டு வரைபு, சிதறல் வரைபு
2) மணிக்கூட்டு வரைபு, விகிதாசார கோள வரைபு
3) விகிதாசார சதுர வரைபு, பல்பார் வரைபு
4) விகிதாசார வட்ட வரைபு, பிரிக்கப்பட்ட வட்ட வரைபு
5) கூட்டுபார் வரைபு, பிரிக்கப்பட்ட வட்ட வரைபு

(……)

12) வெப்பநிலை, மழைவீழ்ச்சி ஆகிய காலநிலைத் தரவுகளை வரைபடமாக்க மிகப் பொருத்தமான வரைபடங்கள் எவை?
1) மணிக்கூட்டு வரைபு, பிரித்த வட்டவரைபு
2) பிரித்த வட்டவரைபு, நிரல் வரைபு
3) கோட்டு-நிரல் வரைபு, மணிக்கூட்டு வரைபு
4) மணிக்கூட்டு வரைபு, சாதாரணகோட்டு வரைபு
5) சாதாரணகோட்டு வரைபு, பல்கோட்டு வரைபு

(……)

13) பின்வரும் வரைபடங்களை A,B,C,D முறையே சரியான விடையைத்தரும் தொகுதி எது?



A B C D

1) பிரித்த வட்டவரைபு, கூட்டுச்சலாகை வரைபு, பல்கோட்டு வரைபு, ஒப்பீட்டுச்சலாகை வரைபு
2) பிரித்த வட்டவரைபு, ஒப்பீட்டுச்சலாகை வரைபு, பல்கோட்டு வரைபு, தொகுதிச்சலாகை வரைபு
3) பிரித்த வட்டவரைபு, கூட்டுச்சலாகை வரைபு, பல்கோட்டு வரைபு, தொகுதிச்சலாகை வரைபு
4) பிரித்த வட்டவரைபு, தொகுதிச்சலாகை வரைபு, பல்கோட்டு வரைபு, கூட்டுச்சலாகை வரைபு
5) பிரித்த வட்டவரைபு, கூட்டுச்சலாகை வரைபு, பல்கோட்டு வரைபு, கூட்டுச்சலாகை வரைபு

(……)

14) மாதிரி எடுப்பு என்று குறிப்பிடப்படுவது?
1) தகவல் திரட்டும் நபர்களை பரிசோதனைக்கு உட்படுத்துதல்
2) தகவல் திரட்டுவதற்கு எல்லோரையும் தெரிவு செய்யும் முறை
3) ஒரு தொகுதியிலிருந்து எழுமாற்றாக குறிப்பிட்ட சிலவற்றை தெரிதல்
4) தகவல் திரட்டப்பட்வர்களில் திறமையானவர்களை தெரிதல்
5) திரட்டப்பட்ட தகவல்களில் பொருத்தமானவற்றைத் தெரிதல்

(……)

15) இரண்டாம் நிலைத்தரவுகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதி?
1) கள ஆய்வுத்தகவல், வினாக்கொத்து தரவு, விமான ஒளிப்படம்
2) செய்மதிப்படம், புவியியல் தகவல் முறைத்தரவுகள், இடவிளக்கப்படம்
3) செய்மதிப்படம், இடவிளக்கப்படம், பச்சைத்தரவுகள்
4) பச்சைத்தரவுகள், கருப்படங்கள், தேசபட்டங்கள்
5) நேர்காணல், விமான ஒளிப்படம், புத்தகங்கள், இணையத்தளம்

(……)

16) 12, 13, 34, 28, 42, 53, 38, 60, 52 என்ற தரவுத் தொடரின் இடையம், இடை என்பன முறையே?
1) 36, 36 2) 72, 36 3) 36, 38 4) 38, 36 5)36, 72

(……)

17) தொடர்ச்சியான தரவுகளுக்குரிய மூன்று மாறிகளாவன?
1) மழைவீழ்ச்சி, பாடசாலை வரவுப் பதிவெடு, சனத்தொகை அடர்த்தி
2) தாவரங்களின் வளர்ச்சி, நாளாந்த வெப்பநிலை, சிசுக்களின் நிறை
3) இயற்கைத்தாவரப் பரம்பல், நோயாளிகளின் எண்ணிக்கை, ஈரப்பதன்
4) கொழுப்பு நுகர்வு, ஆவியாக்கம், மாணவர்களின் எண்ணிக்கை
5) வீதி விபத்துக்கள், வெளிநாட்டு பறவைகளின் வருகை, இறக்குமதிச் செலவு (……)

18) பின்வருவனவற்றுள் தரவு வங்கிகளாக அமைபவை?
1) இறுவட்டு, இன்ரநெற், புத்தகம், கணினித்தகவல்கள்
2) இன்ரநெற், புத்தகம், பச்சைத்தரவு, வினாக்கொத்து
3) புத்தகம், பத்திரிகை, கட்டுரை, வினாக்கொத்து
4) இன்ரநெற், இறுவட்டு, இசைத்தட்டு, வினாக்கொத்து
5) கணினி, தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி (……)

19) காலணை இடைவீச்சின் சரியான கருத்து எது?
1) நியம மற்றும் சராசரி விலகல்களுக்கிடையிலான வேறுபாடு
2) முதலாம், இரன்டாம் காலணைகளுக்கிடையிலான வேறுபாடு
3) இரண்டாம், மூன்றாம் காலணைகளுக்கிடையிலான வேறுபாடு
4) முதலாம், மூன்றாம் காலணைகளுக்கிடையிலான வேறுபாடு
5) உச்ச மற்றும் இழிவுப் பெறுமானங்களுக்கிடையிலான வேறுபாடு

(……)

V.Naresh BA Hons Geo.Spl

20) $\bar{x}=\Sigma fx/n$ என்ற இடையை அளவிடுவதற்கான புள்ளிவிபரவியல் சூத்திரத்தில் Σfx என்பது எதனைக் குறிக்கும்?
1) ஒவ்வொரு வகுப்பினதும் நடுப்பெறுமானங்களின் கூட்டுத்தொகை
2) ஒவ்வொரு மீடிறன் பெறுமானங்களின் கூட்டுத்தொகை
3) நடுப்பெறுமானங்களை மீடிறன்களால் பெருக்கியதன் கூட்டுத்தொகை
4) நடுப்பெறுமானங்களை மீடிறன்களால் பெருக்கியதன் கூட்டுத்தொகை மீடிறன் எண்ணிக்கையால் பிரித்தல்
5) மீடிறன்களின் கூட்டுத்தொகையை வகுப்பாயிடைகளால் பெருக்குதல்

(……)

21) $\bar{x}=\Sigma fx/n$ என்ற இடையை அளவிடுவதற்கான புள்ளிவிபரவியல் சூத்திரத்தில் fx என்பது எதனைக் குறிக்கும்?
1) ஒவ்வொரு வகுப்பினதும் நடுப்பெறுமானங்களின் கூட்டுத்தொகை
2) ஒவ்வொரு மீடிறன் பெறுமானங்களின் கூட்டுத்தொகை
3) நடுப்பெறுமானங்களை மீடிறன்களால் பெருக்கியதன் கூட்டுத்தொகை
4) நடுப்பெறுமானங்களை மீடிறன்களால் பெருக்குதல்
5) மீடிறன்களின் கூட்டுத்தொகையை வகுப்பாயிடைகளால் பெருக்குதல்

(……)

22) $\frac{\bar{x}=\sqrt{(\sum fx)2}}{n}$ என்ற சமன்பாடு **(2=வர்க்கம்)** புள்ளிவிபரவியலில் எந்த அளவீட்டினை அளவீடுவதற்குரியதாகும்?
1) இடைவீச்சு 2) சராசரி விலகல் 3) காலணை வீச்சு 4) விலகலிடை 5) நியம விலகல்

(……)


23) தரவுத்தொகுதி ஒன்றிற்கான மேலின, கீழின ஒகைவ் வளையிகள் சந்திக்கும் பகுதி எதற்குச் சமமானதாகும்?
1) முதலாம் காலணைக்கு 2) இரண்டாம் காலணைக்கு 3) மூன்றாம் காலணைக்கு
4) சராசரிக்கு 5) காலணை இடைவீச்சுக்கு

(……)

24) மீடிறன் இழைவரையம் மற்றும் மீடிறன் பல்கோணி ஆகிய வரைபுகள் தொடர்பான தவறான கூற்று எது?
1) வகுப்பாயிடைகளின் மீடிறன்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு வரையப்படுகின்றது
2) மீடிறன் இழைவரையம் மற்றும் மீடிறன் பல்கோணி ஆகியவற்றின் பரப்பளவு சமமானவையாகும்
3) மீடிறன் இழைவரையம் மற்றும் மீடிறன் பல்கோணி ஆகியன நேர்கோடுகளாக வரையப்படும்
4) மீடிறன் இழைவரையம் மற்றும் மீடிறன் பல்கோணி இரண்டையும் ஒரே படத்தில் அமைக்கலாம்
5) மீடிறன் இழைவரையம் மற்றும் மீடிறன் பல்கோணி ஆகியவற்றின் பரப்பளவு சமமானவை அல்ல

(……)

25) பின்வரும் வரைபடங்களில் மீடிறன் இழைவரையம், மீடிறன் பல்கோணி என்பவற்றின் சரியான வரைபடம் எது?



(1) (2) (3) (4) (5)

(……)

26) புவியியல் தகவல் ஒழுங்கு முறையில் அதிகளவில் கையாளப்படும் தரவுகள்?
1) பச்சைத்தரவுகள், எண்சார் தரவுகள் 2) பச்சைத்தரவுகள், ஒழுங்குபடுத்திய தரவுகள்
3) பண்புசார் தரவுகள், பச்சைத்தரவுகள் 4) பண்புசார் தரவுகள், இடம்சார்ந்த தரவுகள்
5) எண்சார்ந்த தரவுகள், இடம்சார்ந்த தரவுகள்

(……)

27) பல்வேறுபட்ட நிலப்பயன்பாட்டம்சங்களை படமாக்கும் GIS படமாக்கல் பகுப்பாய்வு நுட்பமுறை எது?
1) வலயப்பகுப்பாய்வு 2) வலைப்பின்னல் பகுப்பாய்வு 3)அண்மை பகுப்பாய்வு
4) மேற்படிதல் பகுப்பாய்வு 5) படத்திருத்தல் பகுப்பாய்வு

(……)

28) இயற்கை அனர்த்த முன்னெச்சரிக்கை தொடர்பான GIS படமாக்கல் பகுப்பாய்வு நுட்பமுறை எது?
1) வலயப்பகுப்பாய்வு 2) வலைப்பின்னல் பகுப்பாய்வு 3)அண்மை பகுப்பாய்வு
4) மேற்படிதல் பகுப்பாய்வு 5) படத்திருத்தல் பகுப்பாய்வு

(……)

29) புவியியல் தகவல் முறைமையில் இடஞ்சார்ந்த தரவுகளைப் படமாக்கும் போதுள்ள தோற்றம் எது?
1) புள்ளி, மூடிய உருவம், வட்டம் 2) புள்ளி, மூடிய உருவம், கோடு
3) புள்ளி, கோடு, மூடிய உருவம் 4) நெய்யரி, ஆள்கூறு, புள்ளி
5) வட்டம், நாற்பக்கல், முக்கோணம்

(……)

V.Naresh BA Hons Geo.Spl

30) GPS நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் படமொன்றின் தனித்துவமான அம்சம் எது?
1) கணினியில் சேமித்த தரவுகளை காட்சிப்படுத்துதல்
2) பல்வேறு புவியியல் அம்சங்களை தெளிவாக முன்வைத்தல்
3) முப்பரிமான இடவிளக்க அம்சங்களின் சரியான அமைவிடத்தைக் காட்டுதல்
4) மேற்பரப்பிலுள்ள ஓரிடத்தின் உண்மையான அமைவிடத்தைக் காட்டுதல்
5) மேற்பரப்பிலுள்ள ஓரிடத்தின் சார்பு அமைவிடத்தைக் காட்டுதல்

(……)

31) இரண்டாம் வகை நிலவுருவங்களைக் கொண்டமைந்த விடைத்தொகுதி எது?
1. சமுத்திர அகழி, நீர்வீழ்ச்சி, தீப்பாறை
2. சமுத்திர அகழி, கண்டச்சாய்வு, தீப்பாறை
3. சமுத்திர அகழி, நீர்வீழ்ச்சி, கண்டங்கள்
4. சமுத்திரங்கள், நீர்வீழ்ச்சி, தீப்பாறை
5. சமுத்திர அகழி, சமுத்திரங்கள், கண்டங்கள்

(……)

32) வளிமண்டல மாசாக்கிகளைக் கொண்ட விடைத்தொகுதி எது?
1. சல்பர் ஒக்சைட், காபனீரொக்சைட், மெதேன்
2. சல்பர் ஒக்சைட், காபனீரொக்சைட், நைதரசன்
3. சல்பர் ஒக்சைட், நைதரேட் ஒக்சைட், மெதேன்
4. சல்பர் ஒக்சைட், காபனீரொக்சைட், ஓட்சிசன்
5. ஐதரசன், காபனீரொக்சைட், மெதேன்

(……)

33) இரும்பு, மக்னீசியம் என்பவற்றைக் குறைவாகக் கொண்ட அமிலப்பாறை எது?
1. கப்ரோ 2. தொலமைட் 3. தயோரைட் 4. கருங்கல் 5. நிலக்கரி

(……)

34) தீப்பாறையிலுள்ள பிரதான இரசாயனச் சேர்க்கைகளாவன?
1. இரும்பு, மக்னீசியம்
2. சிலிக்கா, மக்னீசியம்
3. நிக்கல், இரும்பு
4. சிலிக்கா, இரும்பு
5. நிக்கல், சிலிக்கா

(……)

35) இரசாயன மற்றும் சேதன முறைகளினால் உருவாகும் இரு அடையற்பாறைகளைக் கொண்ட விடை எது?
1. லிக்னைட், லிமோனைட்
2. உப்பு, எலைட்
3. காபனேட், தொலமைட்
4. பசோல்ட், கப்ரோ
5. உறைகளிக்கல், சுண்ணக்கல்

(……)

36) கருங்கல், சுண்ணக்கல் என்பன உருமாறித் தோன்றிய பாறை வகைகள் முறையே?
1. நயிஸ், சலவைக்கல்
2. மாக்கல், நயிஸ்
3. குவாட்சைட், நயிஸ்
4. சலவைக்கல், மாக்கல்
5. குவாட்சைட், மாக்கல்

(……)

37) மண்ணின் வளமான படை எனப்படுவது எது?
1. படுக்கைப்பாறை
2. உப மண்படை
3. சேதனப்படை
4. உக்கல் படை
5. பாறை கலந்த படை

(……)

38) இலங்கையின் உயர்நிலத்தொடர் உருமாறிய பாறைகளின் பிரதான வகைகள்?
1. கடுகண்ணாவ நயிஸ், சாணோகைற்
2. மயோசீன் சுண்ணாம்பு, பளிங்குருச் சுண்ணாம்பு
3. கொண்டலைற், சாணோகைற்
4. கொண்டலைற், கடுகண்ணாவ நயிஸ்
5. கடுகண்ணாவ நயிஸ், பளிங்குருச் சுண்ணாம்பு

(……)

39) இலங்கையில் முழுமையாக சாணோகைற் பாறைகளைக் கொண்ட மலைப் பகுதிகள்?
1. ஹப்புத்தளை, ரக்குவானை
2. புளுத்தோட்டை, ஹப்புத்தளை
3. தப்போவை, ரக்குவானை
4. தப்போவை, ஆண்டிகம
5. பல்லம, புளுத்தோட்டை

(……)

40) இலங்கைளில் பத்து இலட்சம் ஆண்டுகளை விடப் பழமை வாய்ந்த பாறைகள் உள்ள இடங்கள்?
1. ஹப்புத்தளை, ரக்குவானை
2. புளுத்தோட்டை, ஹப்புத்தளை
3. தப்போவை, ரக்குவானை
4. தப்போவை, ஆண்டிகம
5. பல்லம, புளுத்தோட்டை

(……)

41) இலங்கையில் மெக்மரைற் வகை இரும்புத்தாது பரந்துள்ள இரு மாவட்டங்களாவன?
1. இரத்தினபுரி, மாத்தறை
2. புத்தளம், இரத்தினபுரி
3. மாத்தறை, புத்தளம்
4. திருகோணமலை, புத்தளம்
5. திருகோணமலை, இரத்தினபுரி

(……)

V.Naresh BA Hons Geo.Spl

42) இலங்கையில் கனியமணற் படிவுகள் அதிகளவு பரந்துள்ள இடங்களாவன?
1. புல்மோட்டை, அம்பேவல, கைக்காவெல
2. புதுவைக்கட்டு, நேவிக்கல்லு, நிலாவெளி
3. புல்மோட்டை, பொல்கொட்டுவ, குதிரைமலை
4. பொல்கொட்டுவ, புல்மோட்டை, நிலாவெளி
5. கைக்காவெல, நிலாவெளி, புதுவைக்கட்டு

(……)

43) இலங்கையில் கெயோலின் களிமண் வகை பரந்துள்ள பகுதிகளாவன?
1. தெதியவல, மீட்டியாகொட, வஸ்கமுவ
2. பொரலஸ்கமுவ, மீட்டியாகொட, வலஸ்முல்ல
3. வலஸ்முல்ல, தெதியவல, ஹிங்குரான
4. மீட்டியாகொட, பொரலஸ்கமுவ, வஸ்கமுவ
5. தியத்தலாவ, மீட்டியாகொட, ஹிங்குரான

(……)

44) நைதரசன், பொட்டாசியம், கல்சியம், மக்னீசியம் என்பவற்றை மத்திய அளவில் கொண்டுள்ள மண் வகை எது?
1. செங்கபில மண்
2. வண்டல் மண்
3. செங்கபில லெற்றசோல்
4. செம்மஞ்சல் பொட்சோல்
5. செம்மஞ்சல் லெற்றசோல்

(……)

45) தானியம் மற்றும் எண்ணெய் விதைகள் போன் பயிர்களுக்குப் பொருத்தமான மண் வகை?
1. செங்கபில மண்
2. வண்டல் மண்
3. செங்கபில லெற்றசோல்
4. செம்மஞ்சல் பொட்சோல்
5. செம்மஞ்சல் லெற்றசோல்

(……)

46) தகடுகள் விலகுதல், ஒருங்குதல், கண்டத்தகட்டின் கீழ் சமுத்திரத்தகடு அமிழ்தல் ஆகிய செயற்பாடுகளால் தோற்றம் பெற்றவற்றை முறையே கொண்ட விடை எது?
1. ஹவாய்த்தீவுகள், மரியானா அகழி, இமயமலை
2. அத்திலாந்திக் முகடு, இமயமலை, மரியானா அகழி
3. றொக்கிமலை, இமயமலை, மரியானா அகழி
4. இமயமலை, மரியானா அகழி, ஹவாய்த்தீவுகள்
5. இமயமலை, மரியானா அகழி, அத்திலாந்திக் முகடு

(……)

47) எட்னா, ஹெக்லா, பினாடுபோ ஆகிய எரிமலைகள் அமைந்துள்ள தீவுகள் முறையே?
1. யப்பான், சைபிரஸ், பிலிப்பைன்ஸ்
2. ஐஸ்லாண்ட், கிறின்லாண்ட், பிலிப்பைன்ஸ்
3. ஹவாய், ஐஸ்லான்ட், பிஜித்தீவுகள்
4. சிசிலி, ஐஸ்லாண்ட், பிலிப்பைன்ஸ்
5. பிலிப்பைன்ஸ், ஐஸ்லாண்ட், சிசிலி

(……)

48) ஆற்றின் முதுமைப்பருவத்தில் காணப்படும் இயல்பாக அமைவது?
1. தரையின் சரிவு அதிகம்
2. நீரின் வேகம் அதிகம்
3. நீரின் அளவு குறைவு
4. படிதல் இடம்பெறும்
5. பக்கச்சுரண்டல் இடம்பெறும்

(……)

49) பாலைவனங்களில் நீரின் செயற்பாட்டினால் உருவாகிய இரு நிலவுருவங்களைக் கொண்ட விடை எது?
1. பிளேயாஸ், பஹாடாஸ்
2. யார்டாங்ஸ், பிளேயாஸ்
3. சீகென்ஸ், பஹாடாஸ்
4. யார்டாங்ஸ், சீகென்ஸ்
5. வாடிஸ், குவாடராஸ்

(……)

50) மலைப்பனிக்கட்டியாற்றரிப்பின் படிதல் நிலவுவங்களை அழைக்கும் சொல்?
1. லொயேஸ்
2. மொரைன்ஸ்
3. கிளிப்ஸ்
4. செப்காஸ்
5. சலினாஸ்

(……)

51) கரையோர நிலவுருவங்களை உருவாக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கொண்ட விடை?
1. பாறையின் தன்மை, அலை, கண்டல் தாவரங்கள்
2. அலை, வற்றுப்பெருக்கு, நீரோட்டங்கள்
3. நீரோட்டங்கள், கடலரிப்பரல்கள், அலை
4. அலை, நீரோட்டங்கள், கடலரிப்பரல்கள்
5. நீரோட்டங்கள், கடலரிப்பரல்கள், வற்றுப்பெருக்கு

(……)

52) காஸ்ட் பிரதேச அரித்தல் நிலவுருவங்களை மட்டும் கொண்ட விடை எது?
1. ஹம்ஸ், போல்யேஸ்
2. பொனார்ஸ், ஹம்ஸ்
3. போல்யேஸ், தொலினேஸ்
4. ஹம்ஸ், தொலினேஸ்
5. உவாலாஸ், ஹம்ஸ்

(……)

53) ஆவியுயிர்ப்பு என்பது?
1. நீர் நிலைகளிலுள்ள நீர் ஆவியாக்கமடைதல்
2. தாவரங்களிலுள்ள நீர் ஆவியாக்கமடைதல்
3. நீர் நிலைகளிலுள்ள நீர் ஆவியுயிர்ப்படைதல்
4. தாவரங்களிலுள்ள நீர் ஆவியுயிர்ப்படைதல்
5. சமுத்திரங்களிலுள்ள நீர் ஆவியாக்கமடைதல்

(……)

V.Naresh BA Hons Geo.Spl

54) அமிலமழைப் பொழிவிற்குக் காரணமான வாயுக்களைக் கொண்ட விடைத்தொகுதி?
1. மெதேன், நைதரசன், கந்தகவீரொக்சைட் 2. காபனீரொச்சைட், நைதரேற் ஒக்சைட், கந்தகவீரொக்சைட்
3. கந்தகவீரொக்சைட், ஐதரசன், ஒட்சிசன் 4. காபனீரொச்சைட், நைதரேற் ஒக்சைட், மெதேன்
5. நைதரேற் ஒக்சைட், மெதேன், கந்தகவீரொக்சைட்

(……)

55) படை மண்டலத்தின் மேல் மேலும் வெப்பநிலை குறைவடைந்து குளிரான நிலை ஏற்படுவது?
1. வெப்ப நேர்மாறல் 2. ஈர நழுவு வீதம் 3. உலர் வெப்ப நழுவு வீதம்
4. வெப்ப நழுவு வீதம் 5. மறை வெப்பநிலை

(……)

56) வளியமுக்கம், ஈரப்பதன் என்னவற்றை அளவிடுவதற்குப் பயன்படுத்தும் கருவிகளை முறையே கொண்டது?
1. ஹைற்றோ மீற்றர், பரோ மீற்றர் 2. ஒக்ராஸ், ஹைற்றோ மீற்றர் 3. பரோ மீற்றர், ஹைற்றோ மீற்றர்
4. அனிமோ மீற்றர், ஹைற்றோ மீற்றர் 5. ஹைற்றோ மீற்றர், பரோ மீற்றர்

(……)

57) இடைவெப்ப வலயத்தின் பிரதான படிவுவீழ்ச்சி வகைகளாக அமைவது?
1. மழைவீழ்ச்சி, தூறல் 2. ஆலங்கட்டி மழை, தூறல் 3. பனிமழை, மழைவீழ்ச்சி
4. பனிமழை, மூடுபனி 5. ஆலங்கட்டி மழை, மழைவீழ்ச்சி

(……)

58) அதிகளவு அல்பீடோ இடம்பெறும் பகுதியாக அமைவது?
1. சமுத்திரம் 2. கண்டம் 3. தாவரம் 4. பனித்தரை 5. பாலைவனம்

(……)

59) அயனத் தாழமுக்க வலயத்தின் அமைவிடமாக விளங்குவது?
1. 30^0 வடக்கு, தெற்கு அகலக்கோடுகளுக்கிடையில் 2. 60^0 வடக்கு, தெற்கு அகலக்கோடுகளுக்கிடையில்
3. 90^0 வடக்கு, தெற்கு அகலக்கோடுகளுக்கிடையில் 4. 45^0 வடக்கு, தெற்கு அகலக்கோடுகளுக்கிடையில்
5. 5^0 வடக்கு, தெற்கு அகலக்கோடுகளுக்கிடையில்

(……)

60) மலேசியாவின் வடமேற்கு, நியூசிலாந்தின் மேற்கு, அஸாம் மலைத்தொடர் போன்ற பிரதேசங்களில் இடம்பெறும் பிரதான மழைவீழ்ச்சி வகை எது?
1. உகைப்பு மழை 2. பருவக்காற்று மழை 3. சூறாவளி மழை
4. பிரிதள மழை 5. பதங்கமாதல் மழை

(……)

61) புவியின் கோட்காற்றுத் தொகுதிகள் வீசுவதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக அமைவது?
1. அமுக்க வேறுபாடுகள் 2. வெப்ப வேறுபாடுகள் 3. மழைவீழ்ச்சி வேறுபாடுகள்
4. கொறியோலிஸ் விசை 5. தரையுயர வேறுபாடுகள்

(……)

62) முதலாம்நிலைச் சுற்றோட்டங்களை மடடும் கொண்ட விடை எது?
1. மேலைக்காற்று, பருவக்காற்று, கீழைக்காற்று 2. மேலைக்காற்று, பருவக்காற்று, சூறாவளி
3. மேலைக்காற்று, வியாபாரக்காற்று, கீழைக்காற்று 4. முரண் சூறாவளி, பருவக்காற்று, கீழைக்காற்று
5. மேலைக்காற்று, கடற்காற்று, தரைக்காற்று

(……)

63) வட அரைக்கோளத்திலும் தென் அரைக்கோளத்திலும் 15^0 தொடக்கம் 20^0 வரை இடை அயன ஒருங்கல் வலயத்தின் செல்வாக்கு இடம்பெறும் இரு பிரதான காலங்கள் முறையே?
1. யூன், யூலை மற்றும் யனவரி, பெப்ரவரி 2. டிசம்பர், யனவரி மற்றும் யூன், யூலை
3. யனவரி, பெப்ரவரி மற்றும் யூன், யூலை 4. யூன், யூலை மற்றும் டிசம்பர், யனவரி
5. டிசம்பர், யனவரி மற்றும் மே, யூன்

(……)

64) அயனச் சவன்னா காலநிலை நிலவும் பிரதேசங்களைக் கொண்ட விடை எது?
1. மேற்கு கொலம்பியா, கிழக்கு மடகஸ்கார், கொங்கோ வடிநிலம், கிழக்கு பிறேசில்
2. நியூகினியின் மேற்கு, சியாரலியோன், போர்னியோ தீவு, இலங்கையின் ஈரவலயம்
3. அவுஸ்ரேலியாவின் வடக்கு, மடகஸ்காரின் வடமேற்கு, கரீபியன் தீவுகள், டெக்கான் பகுதி
4. மேற்கு கொலம்பியா, கிழக்கு மடகஸ்கார், கரீபியன் தீவுகள், டெக்கான் பகுதி
5. நியூகினியின் மேற்கு, சியாரலியோன், கொங்கோ வடிநிலம், கிழக்கு பிறேசில்

(……)

V.Naresh BA Hons Geo.Spl

65) இலங்கையின் காலநிலை வேறுபாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணியாக விளங்குவது?
1. தரையுயர வேறுபாடுகள் 2. சமுத்திரத்தின் செல்வாக்கு 3. அகலக்கோட்டு அமைவிடம்
4. புவிச் சுற்றுகை 5. சிறிய தீவாக இருத்தல்

(……)

66) இலங்கையில் மேற்காவுகை மழை கிடைக்கும் இரு பிரதான காலங்களை முறையே கொண்ட விடை எது??
1. மே தொடக்கம் செப்ரம்பர் மற்றும் டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி
2. மார்ச் தொடக்கம் ஏப்பிரல் மற்றும் ஒக்டோபர் தொடக்கம் நவம்பர்
3. மே தொடக்கம் செப்ரம்பர் மற்றும் ஒக்டோபர் தொடக்கம் நவம்பர்
4. மார்ச் தொடக்கம் ஏப்பிரல் மற்றும் டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி
5. ஒக்டோபர் தொடக்கம் நவம்பர் மற்றும் மே தொடக்கம் செப்ரம்பர்

(……)

67) இலங்கையில் அதிக மழைவீழ்ச்சி கிடைக்கும் இடங்களை முறையே கொண்ட விடை எது?
1. வட்டவளை, மாலிபொட, யட்டியாந்தோட்டை 2. யட்டியாந்தோட்டை, மாலிபொட, வட்டவளை
3. மாலிபொட, மறிச்சுக்கட்டி, கந்தப்பொல 4. வட்டவளை, யட்டியாந்தோட்டை, மாலிபொட
5. மாலிபொட, யட்டியாந்தோட்டை, வட்டவளை

(……)

68) இலங்கையில் மே தொடக்கம் செப்ரெம்பர் வரை வரட்சியான காலநிலை நிலவும் காலநிலை வலயம் எது?
1. தாழநில ஈரவலயம் 2. தாழ்நில உலர்வலயம் 3. உயர்நில ஈரவலயம்
4. உயர்நில உலர்வலயம் 5. அரை வரள் வலயம்

(……)

69) இலங்கையின் கிழக்கு மலைச்சாய்வுகளுக்கு அதிக மழையை வழங்கும் மழைவீழ்ச்சி வகை எது?
1. தென்மேல் பருவக்காற்று மழை 2. சூறாவளி மழை 3. முதலாம் உகைப்புமழை
4. வடகீழ் பருவக்காற்ற மழை 5. இரண்டாம் உகைப்பு மழை

(……)

70) இலங்கையில் பருவக்காற்றுக்கள் வீசுவதற்கான காரணியாக விளங்குவது?
1. உயரமான மலைகள் அமைவு பெற்றிருத்தல் 2. தீவினைச் சுற்றி நீர்ப்பரப்பு காணப்படுதல்
3. ITCZ வடக்கு, தெற்கு நோக்கிய நகர்தல் 4. உள்ளூர் காற்றுக்கள் வீசுதல்
5. வியாபாரக் காற்றின் செல்வாக்கு

(……)

71) சூரியனின் சக்திச் சமநிலையைத் தீர்மானிக்கும் இரு பிரதான விடயங்களாவன?
1. சூரிய கிரகணம், சந்திர கிரகணம் 2. சூரியத்தெறிப்பு, புவித்தெறிப்பு 3. சிற்றலைகள், சூரியத்தெறிப்பு
4. புவித்தெறிப்பு, வளிமண்டலம் 5. தெறித்தல், உறிஞ்சுதல்

(……)

72) பிரதான பச்சை வீட்டு வாயுக்கள்?
1. காபனீரொக்சைட், நைதரசன், ஐதரசன் 2. மெதேன், ஓட்சிசன், கீலியம்
3. நைதரேற்ரொக்சைட், காபனீரொக்சைட், நைதரசன் 3. காபனீரொக்சைட், மெதேன், நைதரசன்
5. காபனீரொக்சைட், மெதேன், நைதரேரொக்சைட்

(……)

73) காலநிலை மாற்றத்திற்கான பிரதான காரணியாவது?
1. பசிய இல்ல வாயுக்கள் அதிகரித்தல் 2. வளி வெப்பநிலை அதிகரித்தல்
3. பாரிய எரிமலைகள் வெடித்தல் 4. அணு உலைக் கசிவுகள்
5. ஞாயிற்றுக் கரும்புள்ளிச் செயன்முறை

(……)

74) பச்சைவீட்டு வாயுக்கள் வெளியேற்றும் இரு பிரதான துறைகள் முறையே?
1. வலுசக்கி, கைத்தொழில் 2. காடழிப்பு, விவசாயம் 3. போக்குவரத்து, விவசாயம்
4. வலுச்சக்தி, காடழிப்பு 5. கைத்தொழில், போக்குவரத்து

(……)

V.Naresh BA Hons Geo.Spl

75) எல்நிநோவால் பாதிக்கப்படும் பிரதேசங்கள்?

1. ஐரோப்பாவின் மேற்குப்பகுதி, தென்னமெரிக்காவின் கிழக்குப்பகுதி, தஸ்மோனியா
2. தென்னமெரிக்காவின் மேற்குப்பகுதி, தென்னமெரிக்காவின் கிழக்குப்பகுதி, பிரித்தானியா
3. தென்னமெரிக்காவின் மேற்குப்பகுதி, அவுஸ்ரேலியாவின் கிழக்குப்பகுதி, நியூசிலாண்ட்
4. தென்னமெரிக்காவின் கிழக்குப்பகுதி, வட அமெரிக்காவின் கிழக்குப்பகுதி, பிரித்தானியா
5. தென்னமெரிக்காவின் மேற்குப்பகுதி, ஹவாய்த்தீவுகள், நியூசிலாண்ட்

(……)

76) சுவட்டு எரிபொருட்களைத் தகனமடையச் செய்யும் இரு பிரதான நடவடிக்கைகள்?

1. வலுசக்கி, கைத்தொழில்
2. காடழிப்பு, விவசாயம்
3. போக்குவரத்து, விவசாயம்
4. வலுச்சக்தி, காடழிப்பு
5. கைத்தொழில், போக்குவரத்து

(……)

77) இலங்கையில் காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட இரு தேசிய நிறுவனங்கள்?

1. நீர்வளங்கள் சபை, ஓசோன் பிரிவு
2. ஓசோன் பிரிவு, நீர்வளங்கள் சபை
3. அனர்த்த முகாமைத்துவ சபை, நீர்வளங்கள் சபை
4. காபன் நிதியம், ஓசோன் பிரிவு
5. காபன் நிதியம், அனர்த்த முகாமைத்துவ சபை

(……)

78) தரைக்கீழ் நீரின் வகைகளாவன?

1. பாறைக்குழம்பு நீர், உடன்தோண்றும் நீர், ஊற்று நீர்
2. ஈரப்பசை நீர், சுவறு நீர், ஊற்று நீர்
3. உடன்தோண்றும் நீர், ஊற்று நீர், ஈரப்பசை நீர்
4. உடன்தோண்றும் நீர், சுவறு நீர், ஊற்று நீர்
5. ஈரப்பசை நீர், பாறைக்குழம்பு நீர், உடன்தோண்றும் நீர்

(……)

79) உலக நன்னீரின் பரம்பலை அதிகளவில் கொண்ட விடை முறையே எது?

1. பனிப்பாறை, தரைக்கீழ் நீர், வளி நீர், மேற்பரப்பு நீர்
2. பனிப்பாறை, தரைக்கீழ் நீர், மேற்பரப்பு நீர், வளி நீர்
3. பனிப்பாறை, மேற்பரப்பு நீர், வளி நீர், தரைக்கீழ் நீர்,
4. மேற்பரப்பு நீர், வளி நீர், பனிப்பாறை, தரைக்கீழ் நீர்,
5. வளி நீர், பனிப்பாறை, தரைக்கீழ் நீர், மேற்பரப்பு நீர்

(……)

80) இலங்கையில் மிக உயர்வாக மழைவீழ்ச்சி கிடைக்கம் 5 நதிகள்?

1. களு கங்கை, களனி கங்கை
2. ஜின் கங்கை, மகா ஓயா
3. மகாவலி கங்கை, களு கங்கை
4. களனி கங்கை, ஜீன் கங்கை
5. கல்லோயா, மகாவலி கங்கை

(……)

81) இலங்கையில் அதிகளவு நீர் வீண்விரயமாகும் 2 நதிகள்?

1. ஜின் கங்கை, களனி கங்கை
2. ஜின் கங்கை, மகா ஓயா
3. மகாவலி கங்கை, களு கங்கை
4. களனி கங்கை, மாதுறு கங்கை
5. கல்லோயா, மகாவலி கங்கை

(……)

82) அயனமழைக்காட்டு உயிர்த்திணிவின் பிரதான தாவரங்களாவன?

1. ஒக், பீச், பேச், மேபிள்
2. ஹெர, தேக்கு, கருங்காலி, மூங்கில்
3. ஹெர, தேக்கு, செஸ்நட், மேபிள்
4. ஹெர, தேக்கு, ரோஸ்மேரி, லவுண்டர்
5. சீதர், பைன், ரோஸ்மேரி, லவுண்டர்

(……)

83) மத்தியதரைக்கடல் பிரதேசம் தவிர்ந்த மத்தியதரைக்காட்டு உயிர்த்திணிவு பரந்துள்ள இடங்களாவன?

1. கலிபோர்ணியா, கேப்ரவுன், சிங்கப்பூர்
2. மலேசியா, சிங்கப்பூர், போர்ணியா
3. கேப்ரவுண், கலிபோர்ணியா, பேர்த்
4. புளோரிடா, கலிபோர்ணியா, பேர்த்
5. பிறேசில், ஆஜென்ரீனா, கஜானா

(……)

V.Naresh BA Hons Geo.Spl

84) பயிர்நிலங்கள் விரிவுபடுத்தப்படுவதனால் அயனமழைக்காடுகள் அழிவடைந்துவரும் பிரதேசங்கள் எவை?
1. ஒறினாக்கோ வடிநிலம், கொங்கோ பள்ளத்தாக்கு, கலிபோர்ணியா
2. அமேசன் பள்ளத்தாக்கு, கொங்கோ பள்ளத்தாக்கு, தென்கிழக்காசியப் பகுதிகள்
3. நைல்நதிப் பள்ளத்தாக்கு, அமேசன் பள்ளத்தாக்கு, கொங்கோ பள்ளத்தாக்கு
4. அமேசன் பள்ளத்தாக்கு, கொங்கோ பள்ளத்தாக்கு, சிங்கராஜ வனம்
5. ஒறினாக்கோ வடிநிலம், அமேசன் பள்ளத்தாக்கு, கொங்கோ பள்ளத்தாக்கு

(……)

85) இலங்கையில் பருவக்காற்றுக்காடுகள் பரந்துள்ள இடங்கள் எவை?
1. நாகியாதெனிய, றூணகந்த, கன்னெலிய
2. கிக்கிலியமான, நக்கிள்ஸ், போபத்தலாவ
3. றுகுணு, யால, உடவளவை
4. புத்தளம், அம்பாந்தோட்டை, மன்னார்
5. சீதா எலிய, சந்ததென்ன, அக்கரப்பத்தனை

(……)

86) இலங்கையில் ஈரப்பத்தனைப் புல்நிலங்கள் பரந்துள்ள இடங்கள் எவை?
1. நாகியாதெனிய, றூணகந்த, கன்னெலிய
2. கிக்கிலியமான, நக்கிள்ஸ், போபத்தலாவ
3. றுகுணு, யால, உடவளவை
4. புத்தளம், அம்பாந்தோட்டை, மன்னார்
5. சீதா எலிய, சந்ததென்ன, அக்கரப்பத்தனை

(……)

87) உலக கவனத்தை ஈர்த்த இலங்கையிலுள்ள சேற்று ஈரநிலம் எது?
1. வனாத்த வில்லு 2. வத்துறான 3. கலா ஓயா 4. முந்தல் 5. மகாவலி

(……)

88) இலங்கையிலுள்ள வற்றுப்பெருக்கு ஈரநிலங்களாக இருப்பவை எவை?
1. வனாத்த வில்லு, வத்துறான, புந்தல
2. முந்தல், புந்தல, திருகோணமலை
3. மகாவலி, வத்துறான, புந்தல
4. புந்தல, திருகோணமலை, வனாத்த வில்லு
5. முருங்கன், வனாத்த வில்லு, வத்துறான

(……)

89) இலங்கையிலுள்ள அதிவிசேட சரணாலயங்களைக் கொண்ட விடை எது?
1. விக்டோரியா, ரந்தனிகல, ரந்தம்ப 2. வில்பத்து, வஸ்கமுவ, புந்தல 3. ரிதிகல, யால, ஹக்கல
4. மின்னேரியா, ஹிக்கடுவை, கிரித்தல 5. ஹக்கல, வஸ்கமுவ, ஹிக்கடுவ

(……)

90) காலநிலை இடர்களைக் கொண்ட விடை எது?
1. பனிமலை வீழ்ச்சி, இடிமின்னல், வெள்ளம்
2. சூறாவளி, பனிமலை வீழ்ச்சி, இடிமின்னல்
3. மண்சரிவு, எரிமலை வெடிப்பு, வரட்சி
4. காட்டுத்தீ, எரிமலை வெடிப்பு, மண்சரிவு
5. சுனாமி, எரிமலை வெடிப்பு, மண்சரிவு

(……)

91) வடபசுபிக், வட அவுஸ்ரேலியா, வட அத்திலாந்திக் பிரதேச சூறாவளிகளின் பெயர்கள் முறையே எது?
1. சைக்குலோன், தைப்பூன், விலிவிவீஸ்
2. தைப்பூன், ஹரிக்கேன், ஸ்பாகியோஸ்
3. தைப்பூன், ஸ்பாகியோஸ், விலிவிலீஸ்
4. தைப்பூன், விலிவிலீஸ், ஹரிக்கேன்
5. ஸ்பாகியோஸ், ஹரிக்கேன், தெனோடாஸ்

(……)

92) உலகில் வெள்ளப்பெருக்கினால் அதிகம் பாதிப்பு இடம்பெறும் நதிக்கரைகள் எவை?
1. குவாங்கோ, கங்கை, நைல் 2. குவாங்கோ, யாங்சி, மீகொங் 3. குவாங்கோ, கங்கை, அமேசன்
4. குவாங்கோ, கங்கை, மிசூரி மிசுசிப்பி 5. குவாங்கோ, யாங்சி, மறேடாலிங்

(….)

93) உலகில் காட்டுத்தீ அதிகளவு இடம்பெறும் பிரதேசங்களாவன?
1. நியூசவுத்வேல்ஸ், எல்பர்ட்றா, அயர்லாண்ட்
2. பிறேசிலியா, எல்பர்ட்றா, கொரலாடோ
3. நியூசவுத்வேல்ஸ், கலிபோர்னியா, கொலராடோ
4. நியூசவுத்வேல்ஸ், கலிபோர்னியா, எல்பர்ட்றா
5. பிறேசிலியா, நியூசவுத்வேல்ஸ், கலிபோர்னியா

(….)

94) உலகில் நிலச்சரிவினால் அதிகளவு பாதிப்பு ஏற்பட்டுவரும் பிரதேசங்கள் எவை?
1. இந்தியா, இலங்கை, சீனா, ரஸ்யா
2. கெய்ட்டி, பிறேசில், சிலி, சீனா
3. சிலி, சீனா, இந்தியா, இலங்கை
4. சிலி, பிறேசில், ஆஜென்ரீனா, பராகுவே
5. பாகீஸ்தான், ஆப்காணிஸ்தான், இந்தியா, சீனா

(…..)

V.Naresh BA Hons Geo.Spl

95) அனர்த்த முகாமைத்துவ வட்டச்செயன்முறையினை ஒழுங்கினைச் சரியாகக் கொண்ட விடை எது?

1. துலங்கல், மீளெழல், இழிவளவாக்கல், அனர்த்தம், முன்தயார் நிலை
2. முன்தயார் நிலை, அனர்த்தம், இழிவளவாக்கல், துலங்கல், மீளெழல்
3. முன்தயார் நிலை, அனர்த்தம், துலங்கல், இழிவளவாக்கல், மீளெழல்
4. முன்தயார் நிலை, அனர்த்தம், துலங்கல், மீளெழல், இழிவளவாக்கல்
5. துலங்கல், மீளெழல், இழிவளவாக்கல், முன்தயார் நிலை, அனர்த்தம்

(….)

96) ஐக்கிய நாடுகளின் சூழல் நிகழ்ச்சித்திட்டம் என்ற அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள நாடு மற்றும் நகரம் என்பவற்றைச் சரியாகக் கொண்ட விடை?

1. சுவீடன் - ஸ்ரொக்கோம்
2. எகிப்து – கெய்ரோ
3. பிறேசில் - புவனஸ்சயஸ்
4. கென்யா – நைரோபி
5. இந்தியா – டில்லி

(….)

97) "நிகழ்ச்சி நிரல் 2" என்ற தலைப்பில் றேகொள்ளப்பட்ட கலந்துரையாடலின் மேற்கொள்ளப்பட்ட இரு உடன்படிக்கைகளின் பிரதான விடயங்களாவன?

1. ஓசோன் படையைப் பாதுகாத்தல், காடுகளைப் பாதுகாத்தல்.
2. உயிரிங்களைப் பாதுகாத்தல், காலநிலை மாற்றத்தைத் தடுத்தல்
3. காலநிலை மாற்றத்தைத் தடுத்தல் , ஓசோன் படையைப் பாதுகாத்தல்
4. ஓசோன் படையைப் பாதுகாத்தல், உயிரிங்களைப் பாதுகாத்தல்
5. உயிரிங்களைப் பாதுகாத்தல், காடுகளைப் பாதுகாத்தல்.

(….)

98) UNFCCC என்ற நிறுவனத்தின் அடிப்படை நோக்கமாக அமைவது?

1. உயிர்ப்பல்வகைமையைப் பேணுதலும் பாதுகாத்தலும்
2. நாடுகளிடையே ஒற்றுமையை வளர்த்தல்
3. பசிய இல்ல வாயுக்களை நிலையான அளவில் பேணல்
4. நீர்வளத்தைப் பாதுகாத்தல்
5. சுற்றுலாக் கைத்தொழிலை வளர்த்தல்

(….)

99) தென்னாசிய சூழல் ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள நகரம் எது?

1. டாக்கா
2. கொழும்பு
3. மும்பாய்
4. கத்மண்டு
5. திம்பு

(….)

100) தென்னாசிய சூழல் ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தில் சுற்றுலாத்துறை தொடர்பான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான நாடு எது?

1. பங்களாதேஸ்
2. பாகிஸ்தான்
3. நேபாளம்
4. இலங்கை
5. இந்தியா

(….)

101) "புவிமேற்பரப்பின் பரப்பியல் வேறுபாடுகளைக் கற்றல் புவியியல்" எனக் கூறிய அறிஞர்?

1. ஹம்போல்ட்
2. ஹட்சோன்
3. ரட்சல்
4. கார்ல் ரிற்றர்
5. கெப்பன்

(….)

102) 2050 ஆம் ஆண்டில் உலகில் சனத்தொகை அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள மூன்று நாடுகள் முறையே?

1. சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா
2. இந்தியா, சீனா, ஐக்கிய அமெரிக்கா
3. இந்தியா, சீனா, நைஜீரியா
4. சீனா, இந்தியா, நைஜீரியா
5. இந்தியா, சீனா, பாகீஸ்தான்

(….)

103) உலகில் சனத்தொகை கூடிய மூன்று கண்டங்களை முறையே?

1. ஆபிரிக்கா, ஆசியா, அவுஸ்திரேலியா
2. ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா
3. ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா
4. வட அமரிக்கா, ஐரோப்பா, ஆசியா
5. ஆசியா, ஐரேப்பா, ஆபிரிக்கா

(….)

104) குடித்தொகைக் கூம்பகங்களில் சுருங்கம் கட்டமைப்பிலுள்ள நாடுகளின் குடித்தொகை இயல்புகளாவன?

1. அதிகரித்த பிறப்பு, அதிகரித்த இறப்பு
2. கூடிய ஆயுட்காலம், குறைவான சிசுமரண வீதம்
3. கூடிய ஆயுட்காலம், குறைவான பிறப்பு
4. கூடிய ஆயுட்காலம், அதிகரித்த பிறப்பு
5. வீழ்ச்சியடையும் குடித்தொகை, அதிகரித்த பிறப்பு

(….)

V.Naresh BA Hons Geo.Spl

105) குடித்தொகைச் சேர்க்கையில் உள்ளடங்கும் விடயங்களைக் கொண்ட விடை எது?
1. இனம், தேசியம், ஆங்கிலம்
2. ஆங்கிலம், பௌத்தம், வர்க்கங்கள்
3. இனம், மதம், மொழி
4. மண்டரீன், ஆங்கிலம், பிரெஞ்சு
5. மொங்கோலொயிட், கொக்கசோயிட், மொங்கோலொயிட்

(….)

106) உலகில் பிறப்புவீதம் குறைவான இரு நாடுகளாவன?
1. சிங்கப்பூர், மலேசியா
2. சீனா, ஜப்பான்
3. ஜப்பான், சிங்கப்பூர்
4. பிறேசில், ஜப்பான்
5. தாய்வான், மலேசியா

(….)

107) உலகில் குடித்தொகையின் இயற்கை அதிகரிப்புவீதம் மிகக் கூடிய இரு நாடுகளாவன?
1. பல்கேரியா, உக்ரேன்
2. இலங்கை, டென்மார்க்
3. லெபனான், சிம்பாப்பே
4. ஜோர்தான், பல்கேரியா
5. கட்டார், ஜோர்டான்

(….)

108) இலங்கையில் சனத்தொகை வளர்ச்சி மிகக் கூடிய இரு மாவட்டங்களாவன?
1. நுவரெலியா, பதுளை
2. அம்பாறை, புத்தளம்
3. அநுராதபுரம்,களுத்துறை
4. குருணாகலை, புத்தளம்
5. மொனரபகலை, பொலநறுவை

(….)

109) இலங்கையின் மேல்மாகாணத்தில் குடிவளர்ச்சி உயர்வாக இருப்பதற்கான இரு காரணங்களாவன?
1. பிறப்புவீதம் அதிகரிப்பு, இறப்புவீதம் குறைதல்
2. தொழில் வாய்ப்புக்கள், வதிவிடத் தேவைப்பாடு
3. குடிவரவு அதிகரிப்பு, குடியகல்வு குறைதல்
4. பிறப்புவீதம் குறைதல், இறப்புவீதம் அதிகரிப்பு
5. அதிக ஆயுள் எதிர்பார்ப்பு, இடப்பெயர்வு

(….)

110) இலங்கையில் பிறப்புவீதம் கூடிய மற்றும் குறைந்த மாவட்டங்கள் முறையே?
1. கொழும்பு, களுத்துறை
2. களுத்துறை, கம்பகா
3.கிளிநொச்சி, முல்லைத்தீவு
4. முல்லைத்தீவு, கிளிநொச்சி
5. அநுராதபுரம், பொலநறுவை

(….)

111) இலங்கைக்கான குடிவரவு அதிகமாகப் பதிவாகிய காலப்பகுதி எது?
1. 1871 தொடக்கம் 1881 வரை
2. 1923 தொடக்கம் 1931 வரை
3. 1945 தொடக்கம் 1953 வரை
4. 1971 தொடக்கம் 1978 வரை
5. 1815 தொடக்கம் 1825 வரை

(….)

112) நகரக் குடியிருப்பின் ஒழுங்கமைப்பு மட்டங்களின் சரியான ஒழுங்குமுறையாக அமைவது?
1. பெருநகரம், நகரம், நகரச் சூழல், நகரப் பகுதி, நகரப் பிரதேசம்
2. நகரம், பெருநகரம், நகரப் பகுதி, நகரச் சூழல், நகரப் பிரதேசம்
3. நகரப் பிரதேசம், நகரச் சூழல், நகரப் பகுதி, பெருநகரம், நகரம்
4. நகரம், நகரப் பகுதி, நகரச் சூழல், நகரப் பிரதேசம், பெருநகரம்
5. நகரப் பகுதி, நகரச் சூழல், நகரம், நகரப் பிரதேசம், பெருநகரம்

(….)

113) இலங்கையில் மிகவும் ஆரம்பகால குடியிருப்புக்கள் தோற்றம் பெற்ற பகுதிகளாவன?
1. பாகியன்கல, வரகாபொல, மாதோட்டம்
2. பட்டதொம்பலன, சிகீரியா, வரகாபொல
3. புந்தல, பதிராஜவல, மினிஹாகல்கந்த
4. குருவிட்ட, வரகாபொல, மாதோட்டம்
5. வரகாபொல, மாதோட்டம், பட்டதொம்பலன

(….)

114) இலங்கையில் உருவான தங்கும் நகரங்களாவன?
1. பிலியன்தல, கடுவெல
2. தெஹிவளை, கோட்டை
3. மாதம்பே, இரத்மலான
4. பிலியன்தல, மாதம்பே
5. மாலபே, ஹோமாகம

(….)

115) ஆபிரிக்க வலயத்தில் கூடிய நகராக்கத்தைக் கொண்ட இரு நாடுகளாவன?
1. நைகர், நைஜீரியா
2. லிபியா, உகண்டா
3. ஜிபௌடி, கானா
4. ரியுனியன், காபொன்
5. புரூன்டி, மலாவி

(….)

116) இரட்டைக் கலப்பாக்கம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தானிய விதையினங்களாவன?
1. IR - 08, IR - 36
2. TN – 1, BG 407 H
3. BG 407 H, IR - 36
4. IR – 36, நொறின் 10
5. BG 407 H, நொறின் 10

(….)

V.Naresh BA Hons Geo.Spl

117) அதிக விளைச்சல் தரக் கூடிய கோதுமை வகைகளாவன?
1. மில்லியாங் 5, சுண்டாமாய் 2. சுண்டாமாய், நொறின் 10 3. மில்லியாங் 5,நொறின் 10
4. IR - 08, சுண்டாமாய் 5. பரிமாஸ்வீர், சுண்டாமாய் (....)

118) மரபணுத்தொழினுட்பம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப்பயிர் அல்லாதது?
1. சோளம் 2. வெங்காயம் 3. பருத்தி 4. சணல் 5. வேம்பு
(....)

119) வடஅமெரிக்காவில் பயன்படுத்திய சூழலில் நீண்ட காலம் நிலைத்திருந்த கிருமிநாசினி வகை எது?
1. நொமினி 2. பரக்குவாட்டர் 3. காபோபியூரான் 4. கிளைப்பொசேட் 5. கோல்
(....)

120) பசுமைப்புரட்சியின் தானிய உணவுகளை உட்கொள்வதால் புற்றுநோயை ஏற்படுத்தும் நச்சுப்பொருள் எது?
1. நொமினி 2. பரக்குவாட்டர் 3. காபோபியூரான் 4. கிளைப்பொசேட் 5. கோல்
(....)

121) வர்த்தக விவசாயத்தின் பண்பாக அமைவது எது?
1. நுகர்விற்காக உற்பத்தி செய்யப்படும் 2. குறுகிய நிலங்களில் உற்பத்தி இடம்பெறும்
3. இயந்திரப் பயன்பாடு செறிவாக இருக்கும் 4. தானியங்கள் பயிரிட்படும்
5. தெங்கு வர்த்தகத்திற்கு மட்டும் பயிரிடப்படுகிறது
(....)

122) இலங்கையிலுள்ள நுண்நீர்ப்பாசன முறைகளாவன?
1. மேற்பரப்பு நீர்ப்பாசனம், தரைக்கீழ் நீர்ப்பாசனம் 2. புவியீர்ப்பு நீர்ப்பாசனம், மேலேற்று நீர்ப்பாசனம்
3. ஆற்று நீர்ப்பாசனம், குளத்து நீர்ப்பாசனம் 4. தூவல் நீர்ப்பாசனம், சொட்டு நீர்ப்பாசனம்
5. தரைக்கீழ் நீர்ப்பாசனம், தூவல் நீர்ப்பாசனம்
(....)

123) இலங்கையில் பொருளாதார மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களாவன?
1. வெலிசறை, தம்புத்தேகம, நாரேகன்பிட்டி 2. கடுவெல, பிலியன்தல, ஹிக்கடுவை
3. தம்புள்ள, மீகொட, கடுவெல 4. கெப்பிட்டிப்பொல, வெலிசறை, கடுவெல
5. வெலிசறை, கடுவெல, கங்வெல
(....)

124) இலங்கையில் உணவுப்பொருட்களை இறக்குமதி செய்வதால் உள்நாட்டில் உற்பத்தி பாதிக்கப்படும் இரு பயிர்களாவன?
1. மரவள்ளிக் கிழங்கு, சின்ன வெங்காயம் 2. உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம்
3. உருளைக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு 4. சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம்
5. மரமுந்திரிகை, பப்பாசி
(....)

125) இலங்கையில் மரபணுநுட்பமுறை அதிகளவு பயன்படுத்தப்பட்ட கிழங்கு வகை எது?
1. உருளைக் கிழங்கு 2. பீற்றூட் 3. மரவள்ளிக் கிழங்கு 4. கரட் 5. கச்சான்
(....)

126) பெற்றோலிய உற்பத்தியிலும் இறக்குமதியிலும் முன்னனி வகிக்கும் இரு பிரதான நாடுகளாவன?
1. இத்தாலி, ஜேர்மனி 2. சீனா, இந்தியா 3. ஐக்கிய அமெரிக்கா, சீனா
4. ஐக்கிய அமெரிக்கா, இத்தாலி 5. சீனா, இத்தாலி
(....)

127) நோயல் டச்செல், எக்கோன் மொபில் ஆகிய பெற்றோலிய உற்பத்தி மற்றும் வர்த்தகம் தொடர்பான நிறுவனங்களுக்கு உரித்தான நாடுகள் முறையே?
1. நெதர்லாந்து, தென்னாபிரிக்கா 2. ஐக்கிய அமெரிக்கா, சவுதி அரேபியா
3. சவுதி அரேபியா, பிரித்தானியா 4. நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா
5. பிரித்தானியா, நெதர்லாந்து
(....)

128) உலகில் காபன் சதவீதம் கூடிய நிலக்கரி வகை எது?
1. பீற்றுமினஸ் 2. இலிக்கினைற் 3. முற்றா நிலக்கரி 4. அந்திரசைற் 5. மைக்கா
(....)

129) செபீல்ட், குஸ்நெட்ஸ், சாங்சி ஆகிய இரும்புத்தாது வளம் பரந்துள்ள நாடுகள் முறையே?
1. ரஸ்யா, சீனா, இந்தியா 2. ரஸ்யா, இந்தியா, சீனா 3. பிரித்தானியா, ரஸ்யா, சீனா
4. இந்தியா, சீனா, பிரித்தானியா 5. பிரித்தானியா, சீனா, இந்தியா (....)

V.Naresh BA Hons Geo.Spl

130) உலக இரும்புருக்கு ஏற்றுமதியில் முன்னனி வகிக்கும் இரு பிரதான நாடுகளாவன?
1. பிறேசில், தென்னாபிரிக்கா 2. பிறேசில், கனடா 3. அவுஸ்திரேலியா, கனடா
4. சுவீடன், பிறேசில் 5. அவுஸ்திரேலியா, பிறேசில்

(….)

131) இலங்கையில் தற்போது செயற்பாட்டிலுள்ள பிரதான காரீயச் சுரங்கங்களாவன?
1. போகல, கஹட்டஹா, ராகெதர 2. சேருவில, ஒருவில, பல்லம 3. பல்லம, போகல, மாரவில
4. மாரவில, எல்லமுல்ல, போகல 5. கஹட்டஹா, மாரவில, எல்லமுல்ல

(….)

132) இலங்கையில் செந்நிற மணிக்கல் பரந்து காணப்படும் பிரதான கரையோரப் பகுதி எது?
1. முல்லைத்தீவு தொடக்கம் நிலாவெளி வரையான கரையோரம்
2. பருத்தித்துறை முனை தொடக்கம் நாகர்கோவில் வரையான கரையோரம்
3. திருக்கோவில் தொடக்கம் பொத்துவில் வரையான கரையோரம்
4. புத்தளம் தொடக்கம் நீர்கொழும்பு வரையான கரையோரம்
5. தேவேந்திர முனை தொடக்கம் அம்பாந்தோட்டை வரையான கரையோரம்

(….)

133) இலங்கையிலுள்ள அப்பரைட் கனியத்தில் அடங்கியுள்ள பிரதான சேர்க்கை எது?
1. பாறைப் பொஸ்பேற் 2. பொஸ்பேற் பென்டொக்சைட் 3. சோடியம் பென்டொக்சைட்
4. அஸ்பெஸ்டோஸ் 5. பொட்டாசியம் பென்டொக்சைட்

(….)

134) இலங்கையின் நாளப்படிவுக் காரீயத்தை அதிகளவு கொள்வனவு செய்யும் மூன்று பிரதான நாடுகள் முறையே?
1. யப்பான், ஜேர்மனி, இந்தியா 2. யப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி
3. தென்கொரியா, யப்பான், இந்தியா 4. ஐக்கிய அமெரிக்கா, தென்கொரியா, இந்தியா
5. தென்கொரியா, இந்தியா, யப்பான்

(….)

135) இலங்கையின் மைக்காவை அதிகளவு கொள்வனவு செய்யும் இரு பிரதான நாடுகள் முறையே?
1. யப்பான், ஜேர்மனி 2. யப்பான், ஐக்கிய அமெரிக்கா 3. தென்கொரியா, இந்தியா
4. யப்பான், சீனா 5. ஐக்கிய அமெரிக்கா, தென்கொரியா

(….)

136) விவசாய மூலப்பொருட்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கைத்தொழில்களாக அமைவன?
1. மோட்டார் வாகனக் கைத்தொழில் 2. சீனிக் உற்பத்தி 3. இரும்புக் கைத்தொழில்
4. இலத்திரனியல் கைத்தொழில் 5. மரக்கறி உற்பத்தி

(….)

137) பேரேரிப் பிரதேசம், தாமோதர் பள்ளத்தாக்கு ஆகிய பிரதேசங்களில் காணப்படும் இயற்கை வளம் எது?
1. சிலிக்கன் 2. சிர்க்கோன் 3. இரும்புத்தாது 4. செம்பு 5. ஈயம்

(….)

138) கைத்தொழில் அமைவிடத்தைத் தீர்மானிக்கும் பௌதிக மூலவளங்களை மட்டும் கொண்ட விடை எது?
1. இயற்கை வளங்கள், நீர்வளம், தரைத்தோற்றம் 2. இயந்திரங்கள், உபகரணங்கள், கட்டடங்கள்
3. தனிநபர் ஆற்றல், பயிற்சிகள், திறமைகள் 4. நீர்வளம், தரைத்தோற்றம், பயிற்சிகள்
5. தனிநபர் ஆற்றல், பயிற்சிகள், கட்டடங்கள்

(….)

139) கைத்தொழில் துறையானது பல்தேசியக் கம்பனிகளின் ஈடுபாட்டினால் விருத்தியடைந்துவரும் பிரதேசங்களாவன?
1. ஐரோப்பா, இந்தோனேசியா, கரீபியன் தீவுகள் 2. தென்னாசியா, தென்கிழக்காசியா, கிழக்காசியா
3. இந்தோனேசியா, கரீபியன் தீவுகள், பிலிப்பைன்ஸ் 4. தென்னாசியா, இலத்தீன் அமெரிக்கா, கிழக்காசியா
5. வட ஆபிரிக்கா, தென்கிழக்காசியா, கிழக்காசியா

(….)

140) மூலதனம் சார் கைத்தொழில் மற்றும் உழைப்பு சார் கைத்தொழில் ஆகிய கைத்தொழில் வகைகளுக்கான எடுத்துக்காட்டாக அமையும் கைத்தொழில்கள் முறையே?
1. விமானம் கட்டுதல் மற்றும் மோட்டார் வண்டி 2. மோட்டார் வண்டி மற்றும் விமானம் கட்டுதல்
3. விமானம் கட்டுதல் மற்றும் ஆடை தயாரிப்பு 4. மோட்டார் வண்டி மற்றும் இரும்புருக்கு
5. கப்பல் கட்டுதல் மற்றும் ஆடை தயாரிப்பு

(….)

V.Naresh BA Hons Geo.Spl

141) உயர் தொழிலுட்பக் கைத்தொழில்களை அமைப்பதில் பிரதானமாகச் செல்வாக்கு மிக்க விடயமாக அமைவது?
1. தொழிலாளர் கிடைப்பனவு 2. போதிய மூலவளம் 3. மூலதன வசதி
4. சாதகமான சந்தை வாய்ப்பு 5. போக்குவரத்து வசதி

(….)

142) உயர் தொழிலுட்பக் கைத்தொழிலில் விருத்தியடைந்து வரும் நாடுகளைக் கொண்ட விடைத்தொகுதி எது?
1. தாய்வான், யப்பான், இந்தியா, இலங்கை 2. சிங்கப்பூர், தாய்வான், மலேசியா, தாய்லாந்து
3. தாய்வான், யப்பான், மலேசியா, தாய்லாந்து 4. மலேசியா, தாய்லாந்து, மாலைதீவு, பாகீஸ்தான்
5. ஹொங்ஹொங், மெகாவோ, கலிபோர்னியா, யப்பான்

(….)

143) டோக்கியோ, சிக்காக்கோ, பிலடெல்பியா, ஒகாயோ ஆகிய நகரங்கள் கைத்தொழில்கள் அமைவு பெறுவதற்குப் பெருமளவு துணை செய்த காரணியாக அமைவது?
1. சந்தை வாய்ப்பு 2. மூலவள வசதி 3. மூலதன வசதி
4. போக்குவரத்து 5. தொழிலாளர் வசதி

(….)

144) நுகர்வோரையும் உற்பத்தியாளரையும் பாதிக்கும் சிக்கலான சந்தையை உருவாக்கும் விடயங்களாவன?
1. விலையேற்றம், விளம்பரங்கள், போட்டித்தன்மை 2. இடைத்தரகர், இலத்திரணியல் ஊடகம், கம்பனிகள்
3. மேலதிக உற்பத்தி, விலையேற்றம், இடைத்தரகர் 4. கம்பனிகள், விலையேற்றம், மேலதிக உற்பத்தி
5. விளம்பரங்கள், இலத்திரனியல் ஊடகம், கம்பனிகள்

(….)

145) தனியார் துறையினரின் கைத்தொழில் அமைவிடத்தினைக் கட்டுப்படுத்தும் அரச கொள்கை சார்ந்த இரு விடயங்களையும் கொண்ட விடை எது?
1. வரிக் கொள்கைகள், வர்த்தக ஒப்பந்தங்கள் 2. சுற்றாடல் பாதுகாப்பு, பிரதேச அபிவிருத்தி
3. ஏற்றுமதி வாய்ப்பு, சுற்றாடல் பாதுகாப்பு 4. பிரதேச அபிவிருத்தி, வரிக் கொள்கைகள்
5. வர்த்தக ஒப்பந்தங்கள், சுற்றாடல் பாதுகாப்பு

(….)

146) இலங்கையின் சீமெந்து, சீனிக் கைத்தொழில்களின் அமைவிடத்தில் துணைசெய்த பிரதான காரணியாக அமைவது?
1. தொழிலாளர் 2. மூலப்பொருள் 3. மூலதனம் 4. போக்குவரத்து 5. சந்தை

(….)

147) இலங்கையிலிருந்து ஆடை ஏற்றுமதி செய்யப்படும் இரு பிரதான இடங்களாவன?
1. கிழக்காசியா, மத்திய ஆசியா 2. ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா
3. ஐரோப்பிய ஒன்றியம், கிழக்காசியா 4. மேற்காசியா, ஐரோப்பிய ஒன்றியம்
5. ஆபிரிக்க ஒன்றியம், ஐரோப்பிய ஒன்றியம்

(….)

148) இலங்கையின் ஆடை கைத்தொழில் அமைவில் துணைசெய்த இரு பிரதான காரணிகளாவன?
1. தொழிலாளர், போக்குவரத்து 2. மூலப்பொருள், தொழிலாளர் 3. தொழிலாளர், மூலதனம்
4. போக்குவரத்து, சந்தை 5. சந்தை, தொழிலாளர்

(….)

149) இலங்கையில் இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் கைத்தொழில்கள் அமைந்துள்ள மூன்று பிரதான இடங்களாவன?
1. தெதியவல, சப்புகஸ்கந்த, பொரலஸ்கமுவ 2. கட்டுநாயக்கா, பியகம, சப்புகஸ்கந்த
3. கட்டுநாயக்கா, பியகம, தெதியவல 4. சப்புகஸ்கந்த, பொரலஸ்கமுவ, மீட்டியாகொட
5. அச்சுவேலி, கட்டுநாயக்கா, பியகம

(….)

150) இலங்கையில் முகமூடி, பித்தளை ஆகிய பாரம்பரிய கைவினை உற்பத்திகள் இடம்பெறும் இடங்கள் முறையே?
1. எம்பக்க, பிலிமத்தலாவ 2. பிலிமத்தலாவ, தும்பறை 3. தும்பறை, யாழ்ப்பாணம்
4. அம்பலாங்கொட, பிலிமத்தலாவ, 5. அம்பலாங்கொட, பிலிமத்தலாவ

(….)

151) இலங்கையின் கைவினை உற்பத்திக் கைத்தொழில் அமைவில் துணைசெய்த இரு பிரதான காரணிகளாவன?
1. தொழிலாளர் வசதி, போக்குவரத்து வசதி 2. மூலப்பொருள் வசதி, தொழிலாளர் வசதி
3. தொழிலாளர் வசதி, மூலதன வசதி 4. போக்குவரத்து வசதி, சந்தைக் காரணிகள்
5. சந்தைக் காரணிகள், சுற்றுலாக் கைத்தொழில்

(….)

V.Naresh BA Hons Geo.Spl

152) கடந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டிலும் நடப்பாண்டின் முதற் காலாண்டிலும் இலங்கையின் சுற்றுலாத்துறை எதிர்கொண்ட பிரதான சவால்கள் முறையே?

1. காலநிலை மாற்றம் மற்றும் சூழல் மாசடைதல்
2. சூழல் மாசடைதல் மற்றும் தொற்றுநோய்த்தாக்கம்
3. தொற்றுநோய்த்தாக்கம் மற்றும் பயங்கரவாதம்
4. பயங்கரவாதம் மற்றும் தொற்றுநோய்த்தாக்கம்
5. நெகிழ்ச்சியான பயண அனுமதிகள் மற்றும் பயங்கரவாதம்

(….)

153) அண்ணளவாக 95 வீதமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதற்கான இரு பிரதான காரணங்களாவன?

1. இராஜதந்திரம், விளையாட்டுக்கள்
2. வர்த்தகம், உறவினர்களைப் பார்த்தல்
3. பொழுதுபோக்கு, உறவினர்களைப் பார்த்தல்
4. மாநாடுகள், வர்த்தகம்
5. மாநாடுகள், உறவினர்களைப் பார்த்தல்

(….)

154) இலங்கையில் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளால் சுற்றுலாவுக்கு ஈர்க்கப்படும் இடங்களாக அமைவன?

1. பாசிக்குடா, அறுகம்குடா, கதிர்காமம்
2. கதிர்காமம், முல்லைத்தீவு, பின்னவல
3. யாழ்ப்பாணம், பின்னவல, கதிர்காமம்
4. பின்னவல, புந்தல, பாசிக்குடா
5. தம்புள்ள, யாழ்ப்பாணம், வவுனியா

(….)

155) 2019 ஆம் ஆண்டில் இலங்கையின் சுற்றுலாத்துறை புள்ளிவிபரங்களில் மிகவும் சரியாக அமைந்த விடயமாவது?

1. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் முதலாம் காலாண்டில் சுற்றுலாப் பயணிகள் அதிகரித்துள்ளமை.
2. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இரண்டாம் காலாண்டில் சுற்றுலாப் பயணிகள் அதிகரித்துள்ளமை.
3. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் முதலாம் காலாண்டில் சுற்றுலாப் பயணிகள் குறைவடைந்துள்ளமை.
4. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இரண்டாம் காலாண்டில் சுற்றுலாப் பயணிகள் குறைவடைந்துள்ளமை.
5. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டுக்கான மொத்த வரவுகள் அதிகரித்துள்ளமை.

(….)

156) பூகோளமயமாக்கல் செயன்முறைக்கு அடிப்படையாக இருந்த இரு விடயங்களாவன?

1. தகவல் தொடர்பாடல் வளர்ச்சி, கைத்தொழில் வளர்ச்சி
2. கைத்தொழிழ் வளர்ச்சி, விவசாய உற்பத்தி
3. விவசாய உற்பத்தி, தகவல் தொடர்பாடல் வளர்ச்சி
4. தகவல் தொடர்பாடல் வளர்ச்சி, சந்தை
5. தகவல் தொடர்பாடல் வளர்ச்சி, உட்கட்டமைப்பு வளர்ச்சி

(….)

157) பூகோளமயமாக்கல் செயன்முறையானது நீண்ட வரலாற்றைக் கொண்டது என்பதற்கான இரு காரணிகளாவன?

1. நாடுகாண் பயணங்கள், கைத்தொழில் வளர்ச்சி
2. கைத்தொழிழ் வளர்ச்சி, விவசாய உற்பத்தி
3. நாடுகாண் பயணங்கள், குடியேற்றவாதம்
4. குடியேற்றவாதம், கைத்தொழில் வளர்ச்சி
5. நாடுகாண் பயணங்கள், தகவல் தொடர்பாடல் வளர்ச்சி

(….)

158) பூகோளமயமாக்கலில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் தரவுச் செயன்முறைகளைக் கொண்ட விடை எது?

1. சேகரித்தல், சேமித்தல், ஒழுங்குபடுத்தல், வெளியிடுதல்
2. சேகரித்தல், ஒழுங்குபடுத்தல், சேமித்தல், வெளியிடுதல்
3. சேமித்தல், ஒழுங்குபடுத்தல், சேகரித்தல், வெளியிடுதல்
4. சேமித்தல், ஒழுங்குபடுத்தல், வெளியிடுதல், சேகரித்தல்
5. சேகரித்தல், வெளியிடுதல், சேமித்தல், ஒழுங்குபடுத்தல்

(….)

159) தகவல்களை விரைவாக ஒழுங்கமைக்கவும் அதிகளவு தகவல்களை சேமிக்கக் கூடிய ஆற்றல் கொண்ட விடயம்?

1. வன்தட்டு
2. காந்த இறுவெட்டு
3. தற்போக்கு பெறுவழி நினைவகம்
4. நுண் வழிமுறையாக்கி
5. நுண் சில்லு

(….)

160) உலகில் அதிகளவு பல்தேசியக் கம்பனிகளின் உரிமையுடைய மூன்று முக்கிய நாடுகள் முறையே?

1. யப்பான், இந்தியா, இத்தாலி
2. பிறேசில், மெக்சிக்கோ, இந்தியா
3. அவுஸ்திரேலியா, சீனா, யப்பான்
4. யப்பான், ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா
5. யப்பான், பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா

(….)

161) பிரித்தானியாவின் பல்தேசியக் கம்பனிகளை உள்ளடக்கிய விடைத்தொகுதி எது?

1. மொன்சன்ரோ, கொக்ககோலா
2. காகிள்ஸ், மிற்சுய்
3. மொன்சன்ரோ, மிற்சுய்
4. கொக்ககோலா, மெர்க்
5. மெர்க், யுனிலெவர்

(….)

V.Naresh BA Hons Geo.Spl

162) வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் பல்தேசியக் கம்பனிகள் உருவாவதற்கான காரணம் அல்லாதது எது?
1. உற்பத்திச் செலவு குறைவாக உள்ளமை
2. முதலீட்டுக்கான வாய்ப்பு இருத்தல்
3. நெகிழ்வான சட்டதிட்டங்கள் காணப்படுதல்
4. அதிகளவுவு தொழிலாளர் சம்பளம் வழங்குதல்
5. உட்கட்டமைப்புக்களை விருத்தி செய்தல்

(….)

163) வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் பல்தேசியக் கம்பனிகளினால் ஏற்படும் பாதக தாக்கம் அல்லாதது எது?
1. ஏழை, பணக்கார இடைவெளி குறைதல்
2. சமமான அபிவிருத்திப் பங்கீடு இல்லாமை
3. உள்நாட்டுக் கைத்தொழில் வீழ்ச்சி அடைதல்
4. மனித உரிமைகள் மழுங்கடிக்கப்படுதல்
5. சூழல் பிரச்சினைகள் அதிகரித்தல்

(….)

164) சர்தேச ரீதியில் உணவகங்களின் வலையமைப்பில் முக்கியமான பல்தேசிய நிறுவனங்களாவன?
1. எம்.சி. டொனால்ட், பீட்சா கட், டொமினஸ்
2. எம்.சி. டொனால்ட், பீட்சா கட், மொன்சன்ரோ
3. எம்.சி. டொனால்ட், கொக்ககோலா, டொமினஸ்
4. கொக்ககோலா, பெப்சி, மொன்சன்ரோ
5. காகில்ஸ், சதோசா, டுபாய்மால்

(….)

165) சார்க் வலய பொருளாதார மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நிதி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை வழங்கும் இரு பிரதான நிதியங்களாவன?
1. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி நிதியம்
2. இந்திய சார்க் நிதியம், உலக வங்கி நிதியம்
3. சர்வதேச நாணய நிதியம், இந்திய சார்க் நிதியம்
4. இந்திய சார்க் நிதியம், ஆசிய அபிவிருத்தி நிதியம்
5. ஜப்பானிய சார்க் நிதியம், தெற்காசிய அபிவிருத்தி நிதியம்

(….)

166) சார்க் வலய நாடுகளின் வர்த்தகப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட இரு பிரதான ஒப்பந்தங்களாவன?
1. சப்தா, ரம்ஸார் 2. ரம்ஸார், ஹுலிபட் 3. ஹுலிபட், சப்தா 4. சப்தா, சப்ரா 5. சப்ரா, ரம்ஸார்

(….)

167) சார்க் அமைப்பு எதிர்கொண்டு வரும் பிரச்சினையாக அமையாத விடை எது?
1. நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பு அதிகரித்தல்
2. பயங்கரவாதம் எழுச்சி பெறுதல்
3. நாடுகள் தன்னிச்சையாக செயற்படுதல்
4. வலய நாடுகளுக்கிடையிலான யுத்தம்
5. நாடுகளுக்கிடையில் ஒத்துழைப்பு குறைவடைதல்

(….)

168) ஆசியன் அமைப்பின் ஆரம்ப அங்கத்துவ நாடுகளுள் உள்ளடங்கும் நாடுகளாவன?
1. பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா
2. இந்தோனேசியா, புறுனே, மியன்மார், கம்போடியா
3. மியன்மார், கம்போடியா, லாவோஸ், வியட்நாம்
4. லாவோஸ், வியட்நாம், புறுனே, கம்போடியா
5. லாவோஸ், வியட்நாம், புறுனே, மியன்மார்

(….)

169) ஆசியன் அமைப்பு எதிர்கொண்டு வரும் பிரச்சினையாக அமையாத விடை எது?
1. வறுமை காணப்படுதல்
2. பயங்கரவாதம் நிலவதல்
3. போதைப்பொருள் வர்த்தகம்
4. சட்டவிரோத ஆயுத விற்பனை
5. வலய நாடுகளுக்கிடையிலான யுத்தம்

(….)

170) ஐரோப்பிய ஒன்றியம் எதிர்கொண்டு வரும் பிரச்சினையாக அமையாத விடை எது?
1. வேலை வாய்ப்பின்மை
2. பயங்கரவாத அச்சுறுத்தல்
3. அபிவிருத்தியில் வளர்ச்சி
4. அரசியல் பிரச்சனைகள்
5. அங்கத்துவ நாடுகள் விலகுதல்

(….)

171) ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆரம்ப அங்கத்துவ நாடுகளுள் உள்ளடங்கும் நாடுகளாவன?
1. பெல்ஜியம், பிரானஸ், இத்தாலி
2. பல்கேரியா, சுவீடன், ஸ்பெயின்
3. சுவீடன், ஜேர்மனி, மோல்டா
4. கிரேக்கம், பிரான்ஸ், சைபிரஸ்
5. ருமேனியா, டென்மார்க், போலாந்து

(….)

அன்பான மாணவச் செல்வங்களே!

தற்போது நாம் அனைவரும் எதிர்கொண்டுள்ள பாரிய சவாலான COVID – 19 (corona virus "co" for "corona", "vi" for "virus" and "d" for "disease", while "19") என்ற உயிர்கொல்லித் தொற்றுநோயிலிருந்து உங்கள் உயிர்களை நீங்களே பாதுகாக்க உங்களது வீடுகளிலிருந்தவாறே படியுங்கள். இறுதிப்பரீட்சைக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் புவியியல் பாட ரீதியான தயார்ப்படுத்தல்களை viber group மூலம் என்னால் அனுப்பி வைக்க முடியும். இந்த தொகுப்பில் அனைத்து வினாக்களுக்குமான விடைகளை ஒரு நாளில் 40 வினாக்கள் வீதம் செய்து பார்க்கவும். விடை செய்து பார்த்தவர்கள் viber group/ viber மூலம் அனுப்பவும். எதிர்வரும் வெள்ளிக்கிழமை இதற்கான விடைகள் viber group மூலம் பதிவிடப்படும்.

-Pray for the world people, save from COVID 19-

V.Naresh BA Hons Geo.Spl